# JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU

## CC No. 475/2010

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW - 7/PW- 1 |
| Name | : Tr. V.Sai Prabhakar |
| Father/Husband's Name | : K.R. Venkatesan |
| Village | : C1, Race View Apartments |
| Taluk | : Cart Track Road |
| Caste | : Velacherry, Chennai 600 042 |
| Calling | : |
| Religion | : |
| Age | : 63 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.08.2026.

Accused produced from custody.

**முதல் விசாரணை–**

நான் பல்வேறு வங்கி கிளைகளில் சீப் மேனேஜராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். நான் கடந்த 2009 – 2010 ஆண்டுகளில் சிண்டிகேட் வங்கி மடிப்பாக்கம் கிளையில் கிளை மேலாளராக பணியிலிருந்த போது போலிஸ் ஒருவர் இந்த வழக்கு சம்மந்தமாக விவரம் கேட்டு வங்கிக்கு வந்தார். ஒரு கம்பெனியின் பெயரில் உள்ள வங்கி கணக்கு விவரங்களை கேட்டார் நான் கொடுத்தேன். சாட்சியிடம் 29.09.2009 தேதியிட்ட சிண்டிகேட் வங்கி ஆவணம் காண்பிக்கப்பட்டது. சாட்சி அதிலுள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்று கூறுகிறார். அந்த கடிதம் தான் போலிசாரிடம் கொடுத்ததாக கூறுகிறார். **அந்த கடிதம் அதசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

ஸ்ரீசிவசக்தி அன் கோ என்ற நிறுவனத்தின் வங்கி கணக்கு விவரம் என்னிடம் கேட்கப்பட்டது. அந்த வங்கி கணக்கானது அந்த சமயத்தில் முடிக்கப்பட்டிருந்தது. செந்தில்குமார் என்பவரின் வங்கி கணக்கு விவரங்களையும் கேட்டார்கள். அந்த வங்கி

கணக்கில் ரூ.600/– இருப்பு இருந்ததாக நான் விவரம் கொடுத்துள்ளேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–**

நான் முதல் விசாரணையில் வங்கி கணக்கு விவரங்கள் கேட்கப்பட்ட நபர் குறித்து முதலில் தெரியாது என்று கூறிவிட்டு பின்னர் ஆவணத்தை பார்த்து தான் விவரங்களை கூறியுள்ளேன் என்றாலும், அந்த ஆவணம் ஜோடிக்கப்பட்ட ஆவணம் என்பதால் தான் என்னால் விவரங்களை சரிவர கூற இயலவில்லை என்று சொன்னால் தவறு எனக்கு 17 ஆண்டுகள் ஆகிவிட்டதால் விவரங்கள் நினைவில் இல்லை ஆவணத்தை பார்த்து விவரங்களை கூறினேன். அந்த விவரம் உண்மை தான். எனக்கு எழுத்து பூர்வமாக ஆவணம் கேட்டு போலிசார் கடிதம் கொடுத்தார்களா என்றால் இல்லை. என்ன காரணத்திற்காக போலிசார் இந்த விவரங்களை கேட்டு பெற்றார்கள் என்றால் ஏதோ ஒரு வழக்கிற்காக அந்த விவரங்களை கேட்டார்கள் எந்த வழக்கு என்பது தற்போது ஞாபகமில்லை.

29.09.2009 அன்று தான் என்னை விசாரணை செய்துள்ளனர் ஆனால் அந்த தேதியில் என்னிடம் வாக்குமூலம் எதுவும் பெறப்படவில்லையென்றாலும் மறுநாள் தான் என்னிடம் வாக்குமூலம் பெற்றுள்ளார்கள் என்றாலும் அது குறித்து எனக்கு தற்போது ஞாபகமில்லை. என்னிடம் காட்டப்படும் 28.01.2006 தேதியிட்ட கடிதத்தினை யார் கொடுத்தார்கள் என்றால் நான் கொடுக்கவில்லை. என்னை விசாரணை செய்வதற்கு 3 ஆண்டுகளுக்கு முன்பே மேற்படி கடிதம் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் என்ன காரணத்திற்காக போலிசார் என்னிடம் அந்த ஆவணத்தை பெற்றார்கள் என்று விவரங்கள் தெரியாமல் சாட்சி அளிக்க வந்துள்ளேன் என்றால் அந்த விவரங்கள் எனக்கு ஞாபகமில்லை.

**மறுவிசாரணை–** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.xxx V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.